# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 டிசம்பர் 28, 2024

Weekly E-paper ● December 28, 2024




## அது வெறும் சிலை அன்று!

சுப. வீரபாண்டியன்

**தந்தை பெரியாரின் நினைவு நாள் வீரவணக்கம்**

**அண்ணா பல்கலைக்கழகம் - தேவை கடுமையான நடவடிக்கை.**

தலையங்கம்

**திரும்பத் திரும்பத் திராவிடம் பேசுவோம்!**

நூல் அறிமுகம்: வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 டிசம்பர் 28, 2024 Weekly E-paper ● December 28, 2024


# அது வெறும் சிலை அன்று!

சுப. வீரபாண்டியன்



திருவள்ளுவருக்கு இவ்வளவு பெரிய சிலையா? அதற்கு இத்தனை கொண்டாட்டங்களா என்று சிலர் கேட்கின்றார்கள்.

குஜராத்தில் படேலுக்குச் சிலை வைத்த போது - ஏன் - இதே கன்னியாகுமரியில் விவேகானந்தருக்கு மணிமண்டபம் கட்டிய போது இந்தக் கேள்விகளை யாரும் கேட்கவில்லை!

அங்கே வைத்திருப்பது வெறும் சிலை அன்று! அது ஒரு வரலாற்றுச் சின்னம்! தமிழ் இனத்தின் பெருமைக்கான அடையாளம்!

இந்தியாவின் வரலாறு தெற்கிலிருந்துதான் தொடங்குகிறது என்றால், அது திருவள்ளுவரிடமிருந்து தொடங்குவது தானே சாலப்பொருத்தம் ! அதனை எல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் கலைஞர் அந்தக் கடல் நடுவே சிலை வைத்திருக்கிறார்!

> “ஆனாலும், விவேகானந்தர் மண்டபத்தைச் சிறியதாக்கி, வள்ளுவர் சிலையைக் கலைஞர் பெரியதாக்கிவிட்டாரே என்கிற கவலையும் சிலருக்கு இருக்கிறது! அவர்கள் எதற்கு வேண்டுமானாலும் கவலைப்பட்டுக் கொள்ளட்டும்! நாம் குறளையும் தமிழையும் கொண்டாடுவோம் !”

வள்ளுவருக்கு இருக்கிற முதன்மையையும், உலகப் பொதுமையையும் புரிந்திருக்கிற காரணத்தால் தான், இடையில் வந்தவர்கள் அவருக்குக் காவி உடை உடுத்திக் களியாட்டம் போடுகின்றனர்.

ஆனாலும், விவேகானந்தர் மண்டபத்தைச் சிறியதாக்கி, வள்ளுவர் சிலையைக் கலைஞர் பெரியதாக்கிவிட்டாரே என்கிற கவலையும் சிலருக்கு இருக்கிறது!

அவர்கள் எதற்கு வேண்டுமானாலும் கவலைப்பட்டுக் கொள்ளட்டும்! நாம் குறளையும் தமிழையும் கொண்டாடுவோம் ! ●



# தந்தை பெரியாரின் நினைவு நாள் வீரவணக்கம்

(24.12.2024)

பேரவைத் தலைமை அலுவலகம்



சூலூர்



பொள்ளாச்சி



ஈரோடு



காரைக்குடி



திண்டுக்கல்



இராணிப்பேட்டை




கூடுவாஞ்சேரி



திருவண்ணாமலை







மற்ற மாவட்டங்கள்

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## அண்ணா பல்கலைக்கழகம் – தேவை கடுமையான நடவடிக்கை.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு மாணவிக்கு நேர்ந்துள்ள கொடூரம் தமிழ்நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. பெண்களின் பாதுகாப்பு குறித்த கேள்வியை இந்நிகழ்வு ஏற்படுத்தியுள்ளது.

இவ்வழக்கில் குற்றம் புரிந்தவருக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதைத் தாண்டி, வழக்கின் முதல் தகவல் அறிக்கை பொதுவெளியில் வெளியாகியுள்ளது காவல்துறையின் மீது கடும் அதிருப்தியை மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது. காவல்துறையின் நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்ணின் அடையாளம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படை உரிமை இவ்விஷயத்தில் மீறப்பட்டுள்ளது. இதற்கு காரணமானவர்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கையைப் பொறுத்தே காவல்துறையின் நம்பகத்தன்மை மீட்டெடுக்கப்படும்.

மறுபக்கம் வழக்கம் போல கலாச்சாரக் காவலர்கள் பாதிக்கப்பட்ட பெண்ணின் நடத்தையைக் குறித்து கேள்வியெழுப்பியுள்ளது அருவருக்கத் தக்கதும் அநாகரிகமானதும் ஆகும். பெண்கள் எவ்வாறு உடை உடுத்த வேண்டும், எப்போது வெளியில் செல்ல வேண்டும் என்று வழக்கம் போல பாடம் எடுக்கத் தொடங்கிவிட்டனர். குற்றத்திற்குக் காரணமான ஆண்களுக்கு அறிவுரை சொல்வதை விட்டுவிட்டு பெண்களுக்கான அறிவுரை மட்டுமே எப்போதும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் எல்லா துறைகளிலும் பெண்களின் பங்கேற்பு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் சிறப்பானதாகவே இருந்து வருகிறது. அதற்குப் பெரியாரிய இயக்கங்களின் தொடர் பரப்புரையே காரணமாகும். இது போன்ற நிகழ்வுகளில் அரசு பாடம் கற்றுக் கொண்டு கடுமையான நடவடிக்கை எடுப்பது தமிழ்நாட்டின் சமூக நீதிக் களத்திற்கு அரணாக இருக்கும்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408







**கடந்த 22.12.2024 அன்று தமிழ்நாடு அரசின் மாநில திட்டக் குழு செயல் துணைத் தலைவர் ஜெ. ஜெயரஞ்சன் எழுதிய நூல்கள் அடையாறு முத்தமிழ்ப் பேரவையில் வெளியிடப்பட்டன. திரைப்பட இயக்குநர் கரு. பழனியப்பன் திராவிடர் கழக துணைப் பொதுச்செயலாளர் மதிவதனி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.**

# திரும்பத் திரும்பத் திராவிடம் பேசுவோம்!

நூல் அறிமுகம்

வெற்றிச்செல்வன்

“நான்தான் திராவிடன் என்று நவில்கையில், தேன்தான் நாவெலாம்! வான்தான் என்புகழ்!” என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். திராவிடம் ஒரு பயன்மரம். அத்திராவிடப் பயன்மரத்தின் கனிகளைப் பெற்றவர்களுக்கும், பயனை உணர்ந்தவர்களுக்கும் திராவிடம் தேன்போலத் தித்திக்கும். ஆனால் அப்பயன்மரத்தின் நிழலை அனுபவித்துக் கொண்டே அதன் அடிவேரை அசைத்துப் பார்க்க நினைப்பவர்களுக்கோ அது எட்டிக் காயாய்க் கசக்கும்.




திராவிடம் தமிழ்ச்சொல்லா?! தமிழரா, திராவிடரா? திராவிடமா, தமிழ்த்தேசியமா? என்றெல்லாம் பிதற்றிக் கொண்டிருக்கும் முகநூல் போராளிகளுக்கெல்லாம் முதலுதவி போல வந்திருக்கிறது இந்நூல். “திராவிடம்” என்ற சொல்லை அழிக்க ஆரியமும், போலித் தமிழ்த்தேசியமும் கள்ளக்கூட்டு வைத்துள்ள இன்றைய சூழலில், ‘திரும்பத் திரும்பத் திராவிடம் பேசுவோம்’ என்ற தலைப்பே அவர்களுக்குச் சவுக்கடி.

தமிழ் – தமிழன் தமிழ்நாடு ஆகிய மூன்றுக்காகவும் முக்கால் நூற்றாண்டுக்காலம் எழுதியும் பேசியும் செயல்பட்ட தமிழ்த்தேசியரே தந்தை பெரியார் என்று தொடங்கும் இந்நூல் திராவிட இயக்கத்தினால் விளைந்த பயன்களை ஆயிரக்கணக்கான சான்றுகளில் அள்ளித் தருகிறது.

ஒரு தமிழ்த்தேசியர் எதைப் பேச வேண்டுமோ அவை அனைத்தையும் பேசிய ஒரே தமிழ்த்தேசியர் தந்தை பெரியார் மட்டும்தான் (பக்கம் 10) என்ற வரிகள், இன்று தமிழ்த்தேசியத்திற்கு வரி வரியாகப் பொய்யான பொழிப்புரை எழுதிக் கொண்டிருக்கும் மணியரசன்களை எட்ட நிறுத்துகிறது.

“பொருளாதார உலகமயமாக்கலை எதிர்ப்போர் நாம். ஆனால் பெரியாரிய உலமயமாக்கலை ஆதரிப்போர் நாம்! ஏனென்றால் பெரியாரியம் என்பது ஒரு இனத்துக்கு ஒரு மொழிக்கு ஒரு மாநிலத்துக்கு ஒரு நாட்டுக்கு உரியதல்ல. அதற்குள் அடங்கிவிடக் கூடியதும் அல்ல அது உலகளாவியது. ‘கடவுளை மற; மனிதனை நினை’ என்பது அனைத்துலகுக்கும் பொதுவானது. ‘மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு’ என்பது அனைத்துலகுக்கும் பொதுவானது (உலகப்பன் கட்டுரை பக்கம் 21) என்கிற வரிகளில் எவ்வளவு உண்மை பொதிந்துள்ளது.

விடுதலை, உண்மை ஆகிய ஏடுகளின் பெருமித வரலாறு இலக்கிய நயத்தோடு சொல்லப்பட்டிருக்கிறது என்றால், திராவிட முன்னேற்றக் கழகம் கண்ட போராட்டக் களங்கள் உணர்ச்சிப் பெருக்கோடு விவரிக்கப்பட்டுள்ளன. அண்ணா, கலைஞர் என்ற இருபெரும் ஆளுமைகளைப் பற்றிய எழுத்தோவியங்கள், அவர்களை நமது கண்ணின் முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றன.

பேராசிரியர், நாவலர் ஆகியோரைப் பற்றிய புகழாரங்கள் சில பக்கங்கள் என்றால், தினமணி, ஜெயமோகன் புரட்டுகளுக்குப் பதிலடிகள் சில பக்கங்கள்!

“திராவிடம் என்றால் எரிகிறதா?” என்ற கட்டுரை, திராவிட எதிர்ப்பாளர்களுக்குத் தீரா விடம். ‘திராவிடம்’ என்ற சொல் எதற்காகப் பயன்படுகிறது என்றால் குருமூர்த்தி முதல் மாலன் வரை எச். ராஜாக்கள் முதல் பத்ரிகள் வரை எந்தச் சொல்லைச் சொன்னால் அவர்களுக்கு எரிச்சல் வருகிறதோ அந்தச் சொல் என்பதற்காகவே!’ (பக்கம் 88) என்ற விளக்கம் காலத்தே வெளியிடப்பட்டிருக்கும் கருத்து.

‘திராவிடத்தின் உள்ளடக்கத்தின் தமிழ்த்தேசியமே’ என்ற கட்டுரை ஆகச் சிறந்த ஆய்வுத் தொகுப்பு. கலைஞரின் வெற்றிச் சூத்திரம் 471 என்பதற்கான விளக்கம் படிப்பதற்கு ஆவலைத் தூண்டுவது.

இந்து சமய அறநிலையத்துறை குறித்த கட்டுரையில் தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் நம்மை வியக்க வைக்கும். புரட்டர்களையோ வாயடைக்க வைக்கும்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு வெற்றி நடை போடும் மாட்சியை அளக்கிறது ஒரு கட்டுரை! “எந்த அலையையும் இனி மு.க. ஸ்டாலின் என்ற மலை தடுக்கும்!” என்ற வரி நம்பிக்கையை விதைக்கிறது.

*“Stalin is more dangerous than Karunanidhi”* என்ற வார்த்தைகளைக் கேட்கும் போது காதில் தேன் பாய்கிறது! ‘once more’ என்று கேட்கத் தோன்றுகிறது. திராவிடக் கொள்கையின் வாரிசுகள் எல்லாம் எப்போதும் dangerous தான்!” என்ற வரிகளோடு நிறைவடைகிறது இந்நூல்.

திராவிடர்களுக்குத் தின்னத் தின்னத் திகட்டாத தெள்ளமுது இந்நூல்!

சென்னை புத்தகக் கண்காட்சியில் கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் அரங்கம் 517/518-இல் இந்நூல் கிடைக்கும்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian